வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
Field Work Centre
FWC

# தவணைப் பரீட்சை, மார்ச் - 2018
# Term Examination, March - 2018

| தரம் :- 12 (2019) | 21 | T | I,II | பொருளியல் | புள்ளித்திட்டம் |
|---|---|---|---|---|---|

## பகுதி I

| | | | |
|---|---|---|---|
| 1) 3 | 6) 1 | 11) 1 | 16) 1 |
| 2) 5 | 7) 1 | 12) 2 | 17) 2 |
| 3) 4 | 8) 4 | 13) 3 | 18) 5 |
| 4) 4 | 9) 2 | 14) 3 | 19) 3 |
| 5) 4 | 10) 5 | 15) 1 | 20) 4 |

**பகுதி I 1X20=20 புள்ளிகள்**
**பகுதி II 20X4=80 புள்ளிகள்**
**மொத்தம் = 100 புள்ளிகள்**

## பகுதி II - உப பிரிவு (அ)

*01.* I)

- மூலதனம் என்பது மனிதனால் உற்பத்தி செய்யப்பட்ட உற்பத்தியை மேற்கொள்ளும் கருவியாகும். உ+ம் உபகரணங்கள் கருவிகள் இயந்திரங்கள் மூலப்பொருள் கையிருப்பு என்பன இதிலடங்கும்.
- மனித மூலதனம் என்பது தனிநபர் வேலையாட்கள் கல்வி மற்றும் பயிற்சியின் ஊடாகப் பெற்ற அறிவு திறன்கள் தனிப்பட்ட சமூக ஆளுமையின் ஒட்டுமொத்தமாகும். (2 புள்ளிகள்) (ஒன்றை மட்டும் விளக்கியிருப்பின் புள்ளி வழங்கப்படமாட்டாது)
- மூலதனம் உற்பத்தி நடவடிக்கையில் மீண்டும் மீண்டும் ஈடுபடுத்தப்படும் பௌதீக ரீதியிலான எண்ணக்கருவாகும்.
- மனித மூலதனமானது உழைப்பு மற்றும் மூலதனம் ஆகிய இரண்டினதும் பண்புகளைக் கொண்டது.
- மனித மூலதனத்தில் முதலிடுவது குறித்த நபருடன் இணைக்கப்பட்டதாகும். ஆனால் மூலதனம் இருப்பு மாறி.

(ஏதாவது 2ற்கு 2 புள்ளிகள்)

II)

- உற்பத்திக் காரணிகளை மாற்றியமைத்து குறித்த ஒரு பொருள்களை சேவையினையும் உற்பத்தி செய்வதற்கு கொள்கை ரீதியான தீர்மானங்களை மேற்கொள்ளல்.
- உற்பத்தி செயற்பாட்டை ஒழுங்கமைத்தல்.
- புதியனவற்றை அறிமுகப்படுத்தல்.
- இடரபாயங்களை ஏற்றல் / நிச்சயமற்றதன்மை (1X4=4 புள்ளிகள்)

III)

- பொருளாதாரப் பண்டங்கள் ஒருபோதும் பொருளாதாரமல்லாப் பண்டங்களாக மாற்றமடையாது ஆனால் பொருளாதாரமல்லாப் பண்டங்கள் பொருளாதாரப் பண்டங்களாக மாற்றமடையும்.

உ+ம் :- கடலுக்கு அடியில் பயணம் செய்பவர் ஒட்சிசன் கொண்டு செல்லுதல்.
ஒரு நோயாளிக்கு ஒட்சிசன் பெற்றுக் கொடுத்தல்.
சூரியசக்தியின் மூலம் சூரிய கதிர்களை உற்பத்தி செய்தல்.
போத்தலில் அடைக்கப்பட்ட நீர்.
(ஒட்சிசன், சூரிய ஒளி, நீர், யுடன் தொடர்புடைய எதாவது 2 உதாரணங்களுக்கு 2 புள்ளிகள்)

- காரணம் - 1) வனங்களுக்கான செலவு / சாதனச்செலவு
2) அமையச்செலவு.

(1X2=2புள்ளிகள்)

IV) சமூகத்தில் காணப்படும் வரையறுக்கப்பட்ட வளங்களைப்பயன்படுத்தி மனிதன் தனது பௌதீக தேவைகளையும் விருப்பங்களையும் பூர்த்தி செய்ய மேற்கொள்ளும் செயற்பாடுகளும் நடத்தைகளும் பொருளாதார நடத்தையாகக் கருதப்படும். (2 புள்ளிகள்)
உ+ம் :- பொருட்கள் சேவைகளின் உற்பத்தி, பங்கீடு முதலீடு.

V) பல்வேறு மாற்றுத் தெரிவுகளுக்கிடையில் ஒரு மாற்றத்தை தெரிவு செய்தால் அதற்காக இழக்கப்படுகின்ற அடுத்த சிறந்த தெரிவின் பெறுமதியானது அமையச்செலவாகக் கருதப்படும். (2 புள்ளிகள்)

**முக்கிய விடயம்**

1) அமையச்செலவு என்பது நிதி ரீதியான எண்ணக்கருவல்ல மெய்ரீதியான எண்ணக்கருவாகும்.
2) அமையச் செலவானது உள்ளார்ந்த எண்ணக்கருவாகும்.
அதாவது அமையச்செலவை அதனைத்தெரிவு செய்யும் நபருக்கு மட்டுமே குறிப்பிடலாம். நபருக்குநபர் வேறுபடும்.
3) அமையச் செலவில் வெளிவாரியான செலவொன்று தோன்றாது. (3 புள்ளிகள்)

02. I)

| **நிலையான அமையச்செலவு** | **அதிகரித்துச் செல்லும் அமையச்செலவு** |
|---|---|
| 1. வளங்கள் ஓரினத்தன்மை வாய்ந்தவை | 1. வளங்கள் ஓரினத்தன்மையற்றவை |
| 2. தொழினுட்பமானது இன்னொரு உற்பத்திக்கு பூரணபதிலீட்டுத்தன்மை கொண்டிருத்தல். (தொழில்நுட்பம் நிலையானது) | 2. ஒரு உற்பத்தித் தேர்ச்சி வாய்ந்த வளம்இன்னுமொரு உற்பத்திக்குத் தேர்ச்சியற்றிருத்தல். (தொழில்நுட்பம் வேறுபடும்) |
| 3. ஒரு உற்பத்திக்குப் பயன்படுத்தும் வினைத்திறனான வளைகள் மற்றொரு உற்பத்தி வினைத்திறனாக இருத்தல். | 3. ஒரு உற்பத்திக்குப் பயன்படுத்தும் வினைத்திறனான வளங்கள் மற்றொரு உற்பத்திக்கு வினைத்திறனற்றதாக இருத்தல். |

(ஒப்பிட வேண்டும்) (3X2=6 புள்ளிகள்)

**II)**

| **சந்தைப் பொருளாதாரம்** | **கட்டளைப் பொருளாதாரம்** |
|---|---|
| 1. வளங்கள் தனியுரிமை | வளங்கள் அரசின் உரிமையாக இருத்தல் |
| 2. தனியார் முயற்சியாண்மை | அரச முயற்சியாண்மை |
| 3. தீர்மானம் மேற்கொள்ளல் பரவலாக்கப்பட்டது | தீர்மானம் மேற்கொள்ளல் மையப்படுத்தப்பட்டுள்ளது. |
| 4. விலைப்பொறி முறை | மத்திய திட்டமிடல் முறை |
| 5. இலாபத்தை அதிகரிக்கும் நோக்கில் உற்பத்தியாளர் மத்தியில் கடும்போட்டி நிலவும் | போட்டித்தன்மை காணப்படாது |
| 6. சுயநன்மையின் அடிப்படையில் தீர்மானம் மேற்கொள்ளல் | தீர்மானங்கள் மத்தியதிட்டமிடல் குழுவினால் மேற்கொள்ளப்படும் |

ஏதாவது 4 விடயங்களை ஒப்பிட்டுக்கூறினால்

*(1X4=4புள்ளிகள்)*

III) 1. பொருளாதார ரீதியான ஊக்குவிப்புக்கள்

2. ஒழுக்க விழுமியம் தொடர்பான ஊக்குவிப்புக்கள்
(அறநெறி சார் ஊக்குவிப்புக்கள்)

3. அதிகாரத்தை அடிப்படையாகக் கொண்ட ஊக்குவிப்புக்கள்.

*(1X3=3புள்ளிகள்)*

IV)

- போட்டிச் சந்தை நிலைமை
- சுயநலனை அடிப்படையாகக் கொண்ட ஊக்குவிப்புக்கள் காணப்படல்.
- நுகர்வோர் இறைமை.
- ஒழுங்கமைப்பும் தொடர்பாடலும் தொடர்பான பிரச்சினைகள்.
- தரக்கட்டுப்பாடு வீழ்ச்சியுறல்.
- ஊக்குவிப்புக்கள் போதியதாக இன்மை.
- சூழல் மாசடைதல்.

ஏதாவது 4 விடயத்திற்கு
4 புள்ளிகள்

V)

- விலைப்பொறிமுறையினூடாகக் தீர்க்கப்படும்.
- உற்பத்திக் காரணிகளின் சார்பு விலைகளைக் கருத்திற் கொள்வதன் மூலம் மாற்றீடான தொழில்நுட்பம் தெரிவு செய்யப்படும்.
(மூலதனம் - வட்டி ஊழியம் - சம்பளம்)
- இலாப உச்சப்படுத்தல் / செலவை இழிவுபடுத்தலின் அடிப்படையில் தொழில்நுட்ப தெரிவு இடம்பெறும்.

*(1X3=3புள்ளிகள்)*

## உப பிரிவு (ஆ)

03. I) கிபன் பண்டம் / காட்சிப்பண்டம் *(2 புள்ளிகள்)*

- இப்பண்டங்களின் விலைக்கும் கேள்வித் தொகைக்கும் இடையில் நேர்க்கணியத்தொடர்பு காணப்படும்.
- கிபன் பண்டம் விலை மாற்றத்தின் போது பதிலீட்டுவினைவு எதிர்க்கணியப் பெறுமதி பெறும்.
- காட்சிப் பொருளின் பெறுமதி விலைகூடும் பொழுது அதற்கான கேள்வித்தொகை கூடுவதற்கு காரணம் நுகர்வோர் தனது அந்தஸ்தைக் கூட்டிக் காட்டுவதற்காகும்.

*(ஏதாவது 2 விடயத்திற்கு 2 புள்ளிகள்)*

II)

- குறித்த நேரத்தில் நிரம்பலைத் தீர்மானிக்கும் ஏனைய காரணிகள் மாறாத போது குறித்த பண்டத்தின் விலைக்கும் நிரம்பல் தொகைக்கும் இடையிலான நேர்க்கணியத் தொடர்பினைக் குறிக்கும். *(2 புள்ளிகள்)*

காரணம்

அதிகரித்துச் செல்லும் எல்லைச்செலவு *(1 புள்ளி)*

குறித்த பண்டத்தின் விலை அதிகரிக்கும் போது அப்பண்டத்தின் நிரம்பல் தொடர்பாக உற்பத்தியாளருக்கு உள்ளவிருப்பம் அதிகரித்தல். *(1 புள்ளி)*

காரணங்கள் - விளக்கப்பட்டிருப்பின் *(1 புள்ளி)*

III)

- காரணிகளை அசைக்கக் கூடிய தன்மை
- பண்டங்களின் தன்மை
- களஞ்சியப்படுத்தி வைக்கக்கூடிய ஆற்றல்.
- விலை மாற்றத்திற்கேற்ப நிரம்பலை மாற்றுவதற்கு

*(4 புள்ளிகள்)*

*(விளக்கம் இருப்பின் முழுப்புள்ளிகளையும் வழங்கவும்)*

IV)

- கேள்வியைத் தீர்மானிக்கும் ஏனைய காரணிகள் மாறாத நிலையில் கேள்விக் கோட்டின் குறிப்பிட்ட ஒரு புள்ளியில் விலையின் நுண்ணிய சதவீத மாற்றத்துக்கு ஏற்ப கேள்வித் தொகையின் சதவீத மாற்றத்தை அளவிட்டுக் காட்டுவது புள்ளி விலைக்கேள்வி நெகிழ்ச்சியாகும். *(1 புள்ளி)*
- கேள்விக் கோட்டின் குறித்த இரு புள்ளிகளுக்கிடையேயுள்ள பகுதியில் விலையின் பாரிய மாற்றத்துக்குச் சார்பாகக் கேள்வித்தொகையின் சதவீத மாற்றத்தை அளவிட்டுக் காட்டுதல் வில் நெகிழ்ச்சியாகும். *(1 புள்ளி)*

$$Ed_A = \frac{Qd}{\Delta P} \times \frac{P_1 + P_{2/2}}{Q_1 + Q_{2/2}}$$ *(1 புள்ளி)*

$$Ed = \frac{\Delta Qd}{\Delta P} \times \frac{P}{Qd}$$ *(1 புள்ளி)*

- சூத்திர விளக்கம் *(1 புள்ளி)*

V)

- பண்டங்களுக்கிடையிலான இடைத்தொடர்பை விளக்க.
- சந்தையில் பொருட்களுக்கான போட்டித்தன்மையைத் தீர்மானிப்பதற்கு.
- பொருட்கள் மற்றும் சேவைகளின் சார்பு ரீதியான கேள்வி மாற்றத்தை எதிர்வு கூறுவதற்கு.


(எதாவது 2 விடயத்திற்கு 2 புள்ளிகள்)

04. I) உள்ளீடுகளின் விலை / மூலப்பொருட்களின் விலை / உற்பத்திச்செலவு

- தொடர்புடையப் பொருட்களின் விலை
- தொழிநுட்பம்
- உற்பத்தியாளரின் எதிர்கால விலை எதிர்பார்க்கைகள்
- நிரம்பலாளரின் எண்ணிக்கைகள்
- அரசாங்கத்தின் கொள்கைகள் (வரிகள், மானியங்கள்) (1X4=4 புள்ளிகள்)


II)

- சந்தைவிலைப் பொறிமுறையின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்ட சமநிலை விலை நுகர்வோனுக்கு பாதகமானதாக இருக்கும் போது அவர்களுக்கு உதவும் வகையில் அரசாங்கம் உயர்ந்தபட்ச விலையொன்றை நிர்ணயித்தல்
  ஆகக்கூடிய விற்பனை விலைக்கட்டுப்பாடு எனலாம். (1 புள்ளி)




உ+ம் :- அத்தியவசிய உணவுப்பொருள் (1 புள்ளி)
போக்குவரத்துக்கட்டணம்
உயர்ந்தபட்ச வீட்டுவாடகை. (1 புள்ளி)

கேள்வி நிரம்பல் சக்திகளினால் தீர்மானிக்கப்படும் சந்தைவிலை உற்பத்தியாளனுக்கு நியாயமற்றதென கருதப்படும் சந்தர்ப்பங்களில் அவர்களுக்கு உதவும் விதத்தில் அரசாங்கம் ஆகக் குறைந்த விற்பனை விலையொன்றை சட்டரீதியாக நிர்ணயித்தல் ஆகும். (1 புள்ளி)




உ+ம் :- நெல்லுக்கான ஆகக்குறைந்த விலை (1 புள்ளி)
ஆகக்குறைந்த வேதன விகிதம்
(1 புள்ளி)


(1 புள்ளி)

III)

1) பங்கீட்டு அட்டை விநியோகம்
2) வரிசை முறை
3) இலஞ்சம் மூலம் பங்கீடு செய்தல்
4) வேறு பண்டங்களுடன் இணைத்துப் பங்கீடு செய்தல்
5) கறுப்புச் சந்தைவிலை. (2 புள்ளிகள்)

IV)

- ஆகக் குறைந்த விலைக்கட்டுப்பாட்டின் கீழ் உற்பத்தியாளர்கள் சந்தைக்கு நிரப்பல் செய்ய விரும்புகின்ற மொத்த பொருட் தொகையும் நுகர்வோன் செலுத்த விரும்புகின்ற சந்தையில் தீர்மானிக்கப்படும் விலைக்கும் அரசினால் விதிக்கப்பட்ட ஆகக்குறைந்த விலைக்கும் இடையிலான தொகை அரசு உற்பத்தியாளனுக்கு வழங்குவதாகும். *(2 புள்ளிகள்)*




*(2 புள்ளிகள்)*

V) உற்பத்தி அல்லது நுகர்வு செய்யப்படுகின்ற பண்டத்தின் பெறுமதி மீது குறிப்பிட்ட சதவீதத்தை வரியாக அறவிடுதல் சதவீத வரி – உ+ம் 1 கிலோ கிராம் சீனியின் மீது 5% வரி *(1 புள்ளி)*

உற்பத்தி அல்லது நுகர்வு செய்யப்படுகின்ற பண்ட அலகு ஒன்றின் மீது ரூபா பெறுமதி அடிப்படையில் வரி அறவிடுவது அலகு விதிப்பு எனப்படும்.
உ+ம் :- 1kg சீனியின் மீது 10/= வரி *(1 புள்ளி)*

*05.* I)

| | |
|---|---|
| *1)* நுகர்வுப் பண்டங்களும் சேவைகளும் பரிமாற்றப்படும். | *1)* காரணிச்சேவைகள் பரிமாற்றப்படும் |
| *2)* வீட்டுத்துறை பொருட்கள் சேவைகளுக்கு கேள்வியை ஏற்படுத்துவர். | *2)* உற்பத்தி நிறுவனங்கள் காரணிச் சேவைகளுக்கு கேள்வியை ஏற்படுத்தும் (உள்ளீடுடன்) |
| *3)* உற்பத்தி நிறுவனங்கள் பொருட்கள் சேவைகளை வழங்கும் (வெளியீட்டுடன் தொடர்பு) | *3)* உற்பத்திக் காரணிச் சேவைகளை வழங்குவது வீட்டுத்துறையாகும். |
| *4)* பொருட்கள் சேவைகளுக்கு நேர்கேள்வி | *4)* காரணிச்சேவைகளுக்கு வழிவந்த கேள்வி / மறைமுகக் கேள்வி |

*(1x4=4புள்ளிகள்)*

II)

அ)

$Qd = QS$

$80 - 10P = -40 + 20P$

$120 = 30P \; P = 4$

$QS = 40 + 20 \times 4$

$-40 + 80$

$QS = 40$

$EP =$ ரூபா 4 – *(2 புள்ளிகள்)*

$EQ = 40$ அலகுகள் *(2 புள்ளிகள்)*

ஒப்பிட்டு வேறுபடுத்தல் அவசியம்

வரிக்குபின்னர் சமன்பாடு *(1 புள்ளி)*

இ)

$QS = a + b(P - T)$

$QS = a + b(P - 1.50)$

$QS = 40 + 20(P - 1.50)$

$QS = -40 + 20P - 30$

$QS = -70 + 20P$ *(1 புள்ளி)*

$Qd = QS$

$80 - 10P = -70 + 20P$

$150 = 30P. P = 5$

வரிக்குப்பின் சமநிலைவிலை ரூபா. 5 *(1 புள்ளி)*

ஆ) வரிக்குப்பின் சமநிலைத்தொகை 40 அலகுகுள் (1 புள்ளி)

$Ed = -10 \times \frac{P}{Qd}$ $ES = b \times \frac{P}{Qd}$

$-10 \times \frac{4}{40}$ $+ 20 \times \frac{4}{40_2}$

$Ed = -1$ $EQ = 2.0$ (2 புள்ளிகள்)

ஈ) நுகர்வோர் மிகை மாற்றம் = வரிக்கு முன்னர் நு. மி – வரிக்குப்பின் நு. மி (1 புள்ளி)

80 – 45 = ரூபா 35 (2 புள்ளிகள்)

or சரிவகப்பரப்பளவு $\frac{30+40}{2} = \frac{70}{2} =$ ரூபா 35

உ) உற்பத்தியாளர் பெறும் விலை வரி.பி. EP – 1 அலகுவரி - (1 புள்ளி)

5 – 1.50

ரூபா 3.50 (1 புள்ளிகள்)

ஊ) சமூக நல இழப்பு = அலகுவரி X வரிக்குப்பின்னர் விற்பனைத்தொகை மாற்றம்

$\frac{1.50(10)}{2} =$ ரூபா 7.5 (1 புள்ளி)

06. I)

- உற்பத்தியில் ஒரு சில உள்ளீடுகளை (ஆகக்குறைந்தது ஒரு உள்ளீட்டையேனும் மாற்றிக் கொள்ள முடியாதிருப்பின் அது குறுங்காலம் எனப்படும்.
- இங்கு நிலையான உள்ளீடுகளும் மாறும் உள்ளீடுகளும் காணப்படும். (2 புள்ளிகள்)

உற்பத்தியில் ஈடுபடுத்தப்படும் அனைத்து உள்ளீடுகளையும் மாற்றிக்கொள்ள போதுமான காலம் நீண்டகாலமாகும்.
இங்கு அனைத்து உள்ளீடுகளும் மாறக்கூடியவை. (2 புள்ளிகள்)

II)

- உற்பத்தி செயற்பாட்டில் மூலதன பொறித்தொகுதியின் அளவும் தொழிநுட்பம் இயலளவும் மாற்றமடையாத நிலையில் மாறும் உள்ளீடுகளை மாற்றும் போது உள்ளீட்டுக்கும் வெளியீட்டிற்கும் இடையில் நிலவும் தொழிநுட்ப ரீதியான தொடர்பு குறுங்கால உற்பத்தித் தொழிற்பாடு எனலாம். (1 புள்ளி)

  $Q = f(L, K)$

  $L =$ மாறும்காரணி K நிலையான மூலதனம் or

  $Q = f(V_1, V_2, V_3 - - V_n\ K)$ (1 புள்ளி)

- உற்பத்தி செயற்பாட்டுடன் தொடர்புடைய சகல உள்ளீடுகளையும் மாற்றும் போது உள்ளீட்டுகளுக்கும் வெளியீடுகளுக்கும் இடையில் காணப்படும் தொடர்பினைக் குறிக்கும். (1 புள்ளி)


$$Q = f(L_1, L_2, L_3 - -L_n\ K_1, K_2, K_3 - -K_4)$$ (1 புள்ளி)


III)

- பொருளியல் இலாபங்கள் மொத்த வருமானத்திலிருந்து அமையச் செலவுகளைக் கழிப்பதற்கு சமனாகும். அமையச் செலவுகள் உட்கிடையான மற்றும் வெளிப்படையான செலவுகளின் கூட்டுத்தொகையாகும். *(1 புள்ளி)*
- கணக்கிய இலாபங்கள் மொத்தவருவாயிலிருந்து வெளிப்படையான செலவுகளை கழிப்பதற்குச் சமமாகும். *(1 புள்ளி)*
- பொருளியல் இலாபமானது நிறுவனத்தின் கணக்கியல் இலாபத்திலிருந்து உட்கிடையான செலவுகளைக் கழிப்பதன் மூலம் பெறப்படும். *(1 புள்ளி)*
- கணக்கியல் இலாபம் உட்கிடையான செலவுகளை உள்ளடக்காதபடியால் அது பொருளியல் இலாபத்தை மிஞ்சியதாகக் காணப்படும். *(1 புள்ளி)*

IV)

- நிறைபோட்டிச்சந்தையின் தொழிலின் கேள்விக் கோடானது எண்ணற்ற நுகர்வோரது நடத்தையினை விளக்குகின்றது. இது மேலிருந்து கீழ் இடமிருந்து வலமாக சரிந்து செல்லும்.
- நிறுவனத்தின் கேள்விக் கோடானது விலை ஏற்போராக இருப்பதனால் சந்தையில் நிலவும் விலையை ஏற்பதால் முடிவில் நெகிழ்ச்சியுடையதாக கிடையச்சிற்கு சமாந்தரமாகக் காணப்படும். *(2 புள்ளிகள்)*




*(2 புள்ளிகள்)*

V) 1) நிறைபோட்டி  2) தனியுரிமை  3) தனியுரிமைப்போட்டி  4) சிலருரிமை
*(2 புள்ளிகள்)*

1) சந்தையில் காணப்படும் நிறுவனங்களின் எண்ணிக்கை
2) பொருட்களின் தன்மை
3) நிறுவனம் சந்தைக்குள் பிரவேசிப்பதற்கும் வெளியேறுவதற்குமான சுதந்திரம்.
4) சந்தையிலுள்ள உற்பத்தி நிறுவனங்களுக்கிடையே காணப்படும் போட்டி நிலைமை.

*(2 புள்ளிகள்)*